சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 18.06.2026
வா.சா.1 கபீபா W/o.இப்ராகிம்
OS No.83/2025
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் முதல் விசாரணையில் உள்ள விபரங்களை எல்லாம் படித்து பார்த்து கையெழுத்து செய்யவில்லை. பிரதிவாதி எனக்கு அம்மாவழியில் சொந்தம். பிரதிவாதி எனக்கு சொந்தம் அல்ல என்றும் நான் வேறு லெப்பை சமுகத்தை சேர்ந்தவர் என்றும், பிரதிவாதி ராவுத்தவர் வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. 13.05.2022அன்று பிரதிவாதி முகமது என்னிடம் பணம் கேட்டு அணுகிய அன்றே 1 லட்சம் ரூபாய் ரொக்கமாக அவரிடம் கொடுத்துவிட்டேன். 13.05.2022 அன்று வட்டி, மற்றும் இதரவிபரங்கள் தொகை அன்றே எழுதப்பட்டுவிட்டன. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதியவர் மணிசேகர் ஆவார். 13.05.2022 அன்றே வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுவிட்டது. 09.09.2024 வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்புவதற்கு முன்பாக காவல்நிலையத்தில் நான் புகார் ஏதேனும் பிரதிவாதி மீது கொடுத்திருந்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் தேதி மறந்துவிட்டது. மேற்படி பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கும்போது, முருகன் என்பவரும் வந்திருந்தார். நான் பிரதிவாதியிடம் தான் 1 லட்சம் ரூபாய் கொடுத்தேன். பிரதிவாதி மீது தான் காவல்நிலையத்தில்புகாரும் கொடுத்திருந்தேன். 28.06.2022 அன்று கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் நான் புகார்கொடுத்திருந்தேன் என்றால் நினைவில்லை. மேற்படி புகாரின் மீது முருகன் என்பவர் பணம் கொடுக்க ஒப்புகொண்டதாகவும், பிரதிவாதி மீது நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று எழுதி கொடுத்தேனா என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து வழக்கை தாக்கல் செய்வதற்கு இடைபபட்ட 6 மாத காலம் இடைவேளை உள்ளது தொடர்பாக சிறப்பான

காரணம் இருக்கிறதா என்றால் இல்லை. 27.06.2022ல் புகார் கொடுக்கப்பட்டு, அதன்மீது விசாரணை செய்து புகாரை நான் திரும்ப பெற்றுகொண்டேன் என்றும், தற்போது நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் கையெழுத்தே இல்லாமல் மோசடியாக கையெழுத்தை போட்டு வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் பிரதிவாதி எந்த தொகையையும் கடனாக பெறவில்லை என்றும், நான் தாக்கல் செய்த புரோநோட்டில் பிரதிவாதி எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களை வைத்து பிரதிவாதியிடம் பணம் பிடுங்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு போலியானது என்பதால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.06.18 23:22:03 +0530

Sub Judge

Melur